இலவச காலாண்டு சமய இதழ்



# அகர தீபம்

www.akaram.eu

14.01.2020 - 13.03.2020




## திருக்கேதீஸ்வரம் ஆலய வரலாறு

## திருமகளால் நேர்ந்த திருப்பம்

## அட்டமி நவமி நாட்களில் சுபகாரியத்தை செய்யாமல் தவிர்ப்பது ஏன்?

மாலை : 06 மலர் : 02

திருவள்ளுவர் ஆண்டு 2050

# நுழைவாயில்..

**அகர தீபம் வாசக அன்பர்களுக்கு வணக்கம்,**

**அகர தீபம் தனது ஆன்மீக வாசக அன்பர்களுக்கும் தமிழர் நன்னாளாம் தைப் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறது.**

நாட்கள் சில தாமதமானாலும், நன்னாட்களைப் போற்றுதல், தமிழ் இனத்தின் பாரம்பரியப் பண்புகளில் ஒன்று என்பதால், எமது நல்வாழ்த்துகளை மனமுவந்து ஏற்கும் பண்பு எம்மவர்க்கு உண்டு என்பதால், நல்வாழ்த்துகளைத் தெரிவிப்பதன் மூலம் அகரதீபம் தனது பண்பாட்டுக் கடமையை மனமுவந்து ஆற்றுகிறது.

தைப் பொங்கல் நன்னாளைக் கொண்டாடிய சைவத் தமிழ் அன்பர்களுக்கு மகா சிவராத்திரி விரதம் என்கிற சிவ நோன்பு தமிழ் சைவ அடியார்களின் பெருமைக்குரிய விரத நாளாகும்.

தமிழருக்குள் சாதிமத பேதமற்ற கலாச்சாரத்தை மகா சிவராத்திரி விரதம் காலங் காலமாகப் போதித்து வருகிறது. சில தவறான புரிதல்கள் மற்றும் அந்நியக் கலாச்சார ஊடுருவல் காரணமாக தமிழ் மக்களிடையே சாதிப் பிரிவுகளை ஏற்படுத்தி, அந்நியர் எம் இனத்தை அடிமைப்படுத்த மேற்கொண்ட சதி வேலைகள் காரணமாக தமிழ் மக்கள் சாதி வாரியாகப் பிளவுற நேரிட்டது.

இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட பிளவுகளின் காரணமாக தமிழ் இனம் உலகெங்கனும் நாடற்ற அடிமைகளாக இன்று உள்ளனர் என்கிற உண்மையை யாரும் மூடி மறைக்க கூடாது. 2009ல் ஏற்பட்ட உரிமைப் போரின் கோர முடிவுகளுக்கு எமக்குள் திரும்பவும் புகுத்தப்பட்ட சாதி மற்றும் அவற்றின் பிரதியீடாக உருவான அரசியல் கட்சிகளும் விடுதலைப் போராட்டக் குழுக்களுமே காரணம் எனலாம்..



முற்றிலும் தமிழரால் தமிழில் செய்யப்பட்டு சிவகதியைப் பெற்ற வேடுவ குலத்வாரன கண்ணப்ப நாயனார், வாயில் நீரை மொண்டு அதனைச் சிவன் தலையில் உமிழ்ந்து அபிசேகம் செய்தும் தாம் சுவைத்த இறைச்சியை படையல் செய்தும், சிவனை மகிழ்வித்து சிவபதம் பெற்றார் என்கிற செய்தியால் சிவமதமும், சிவ பக்தர்களும் சாதி மத பேதங்களைக் கடந்தவர் என நிரூபித்த வரலாறு கண்ட மகா சிவராத்திரியில் அனைத்து சிவபக்தர்களின் ஆசி வேண்டி விடை பெறுகிறோம்.

**ஆசிரியர், அகர தீபம்.**

# நன்றி மறக்க கூடாது



ஒருமுறை பகவான் கிருஷ்ணர் உறியில் ஏறி வெண்ணெய் திருட, அவரை தண்டிக்கும் நோக்கத்தில் விரட்டினாள் யசோதை. அவளிடம் சிக்காமல், நண்பன் ததிபாண்டன் வீட்டுக்குள் நுழைந்தான் கிருஷ்ணன். அவனிடம் தாய் விரட்டி வருவதைச் சொல்லி மறைவிடம் தேடினான். அவனோ, உட்கார வைத்து கிருஷ்ணன் மீது பானையை கவிழ்த்து மறைத்தான்.

"ததிபாண்டா! உன் வீட்டுக்கு கிருஷ்ணன் வந்தானா?" என விசாரித்தாள் யசோதை. 'வரவில்லை அம்மா!' என குரல் கொடுத்தான் ததிபாண்டன்.

நம்பிய அவளும் கிருஷ்ணனை தேடி அங்கிருந்து புறப்பட்டாள். அதன் பின் கவிழ்த்திருக்கும் பானையை அகற்றச் சொல்லி குரல் கொடுத்தான் கிருஷ்ணன்.

"எனக்கு மோட்சம் தருவதாக நீ வாக்கு கொடுத்தால் விடுவிப்பேன்" என ததிபாண்டன் அடம் பிடித்தான். கிருஷ்ணனும் சம்மதித்தார். அத்துடன் அவன் விடவில்லை. "இந்த பானைக்கும் மோட்சம் கொடு" எனக் கேட்டான். அதற்கு கிருஷ்ணன் சம்மதித்தார்.

இப்போதும் வைகுண்டத்தில் இந்த பானை இருப்பதாக ஐதீகம். பகவான் கிருஷ்ணர் மண்பானையிடம் கூட நன்றி உள்ளவராக இருக்கிறார். அது போல நாமும் நன்றி மறக்க கூடாது.




அகர தீபம்

மாலை : 06 மலர் : 01

தலைமை
**த. இரவீந்திரன்**

ஆசிரியர்
**ஆதவன்**

உதவி ஆசிரியர்
**வண்னை தெய்வம்**

ஆசிரியர் குழு
**வியாசன்**

வடிவமைப்பு
**ஈழமயூரன்**

ஒப்பு நோக்குனர்
**திரு.செ. அமுதவாணன்**



தொடர்புகளுக்கு

European Tamils Union e.V.
PO.Box 4153, 59037 Hamm
Germany

00 49 176 47 11 87 11

Email : akaratheepam@akaram.eu

www.akaram.eu

GERMANY, SWITZERLAND, FRANCE
ENGLAND, DENMARK, NORWAY,
HOLLAND, SWEDEN, ITALY, CANADA



© ETU e.V.2014 All rights reserved



# மகாசிவராத்திரி

மாதந்தோறும் சிவராத்திரி உண்டு என்றாலும் மாசி மாதத்தில் வருவதே மகா சிவராத்திரி என்று போற்றப்படுகிறது. இன்றைய தினம் திங்கட்கிழமை மகா சிவராத்திரி. சிவபெருமானுக்கு உரிய நாள் என்று திங்கட்கிழமையைச் சொல்லுவார்கள். திங்கட்கிழமைக்கு சோமவாரம் என்று பெயர் உண்டு. எனவே சிவனாருக்கு உரிய திங்கட்கிழமையில், மகா சிவராத்திரி வருவது இன்னும் கூடுதல் சிறப்பு வாய்ந்தது.

சிவாயநம என சிந்திப்போருக்கு அபாயம் ஒருபோதும் இல்லை என்பது ஆன்றோர் வாக்கு. சிவராத்திரியன்று தம்பதிகளாக கணவன்-மனைவி ஆகிய இருவரும் சிவலிங்க வழிபாடு செய்தால் இல்லறம் இன்பமயமாக திகழும். தம்பதிகள் அன்யோன்ய அன்பு நிறைந்து இறைவனின் திருவருளால் வளமுடன் வாழ்வார்கள். சிவராத்திரி விரதம் அனுஷ்டித்து மகாவிஷ்ணு, மகாலட்சுமியையும் சக்கர ஆயுதத்தையும் பெற்றார். பிரம்மா, சரஸ்வதியை பெறும் பாக்யம் அடைந்தார். நந்தியம் பெருமான் சிவராத்திரி மகிமை எடுத்துக் கூறியதை அடுத்து முருகன், சூரியன், சந்திரன், மன்மதன், இந்திரன், அக்னி, குபேரன் ஆகியோர் நல்வரங்களைப் பெற்றார்கள் என புராணங்கள் சொல்கின்றன.

## சிவ தரிசனம்

மனதைக் கட்டுப்படுத்தும் மகாவிரதம், மகா சிவராத்திரி விரதம். ஆகவே, மகா சிவராத்திரியை கொண்டாடத் தேவையில்லை பக்தியுடன் அனுஷ்டிக்க வேண்டும். மகா சிவராத்திரி. இந்த நாளில் உபவாசம் இருக்கவேண்டும். அதாவது சாப்பிடாமல் விரதம் மேற்கொள்ளவேண்டும். கண்விழிக்க வேண்டும். உபவாசத்துடன், கண்விழித்து, ஈசனை நினைந்து உருகி வழிபடவேண்டும். இன்று மகா சிவராத்திரி. இந்தநாளில் முடிந்தவரைக்கும் மகா சிவராத்திரி விரதம் மேற்கொள்வோம். முடிந்தவர்கள், விரதம் மேற்கொள்ளுங்கள். அருகில் உள்ள ஆலயங்களில் இரவில் நடைபெறும் பூஜைகளில் கலந்துகொள்வோம்.

## விஷத்தை விழுங்கிய சிவன்

சிவராத்திரி நாளில் பல முக்கிய சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதாக புராணங்கள் கூறுகின்றன. பாற்கடலை தேவர்களும் அசுரர்களும் இணைந்து கடைந்த போது பொங்கி வந்த ஆலகால விசம் மண்ணுலக மக்களை பாதிக்கக் கூடாது என்று எண்ணிய சிவபெருமான், ஆலகால விசத்தினைத் தனது கண்டத்தினுள் தாங்கி நீலகண்டனாக மாறி

உலகத்தை அழிவில் இருந்து காத்தது இந்த சிவராத்திரி நாளில்தான். அன்னை உமாதேவி ஈசனின் கண்ணை மூடியதால் விளைந்த குழப்பத்தை நீக்கிக்கொள்ள விரதமிருந்து பேறுபெற்றதும் இந்த நாளில்தான். சிவனின் இடபாகத்தினை அன்னை பார்வதி பெற்ற தினம் இந்த நாள்தான்.

## அடி முடி அறியாத அண்ணாமலை

சிவனாரின் திருவடி மற்றும் திருமுடி காணப் புறப்பட்ட திருமாலுக்கும், பிரம்மதேவருக்கும் பாடம் கற்பிக்க நினைத்த சிவபெருமான், லிங்கோத்பவராக பெரும் ஒளிப்பிழம்பாகத் தோன்றி காட்சி அளித்ததும் மகாசிவராத்திரித் திருநாளில்தான். அர்ச்சுனன் பாசுபதாஸ்திரம் பெற்றதும், கண்ணப்பர் தனது கண்ணினை அளித்து ஈசனிடம் மோட்சம் பெற்றதும் இந்த நாளில்தான்.

## குபேரன் செல்வந்தனாக மாறிய தினம்

பிரம்மா தனது படைப்புத் தொழிலை தொடங்கிய இந்த நாளில்தான். இந்திரன் தேவலோக அதிபதியாக மாறியதும் இந்த நாளில்தான். குபேரன் செல்வத்தின் அதிபதியான நாளும் இந்த நாள்தான். கண்ணப்ப நயினார் சிவபெருமானுக்காக தனது கண்களை தானமாக அளித்ததும் இந்த நாள்தான். சிவபெருமான் தனது பக்தன் மார்க்கண்டேயனுக்காக எமனை காலால் உதைத்த தினம் சிவராத்திரி. இன்றைய தினத்தில் விரதம் இருந்து சிவ ஆலயம் சென்றால் ஓராண்டு முழுக்க சிவபூஜை செய்த புண்ணியம் உங்களை வந்து சேரும்.



## வில்வமே போதும்

சிவ ராத்திரி நாளில் விடிய விடிய நான்கு சாமங்களிலும், நான்கு கால பூஜை நடத்த வேண்டும். வாசனை மலர், அலங்காரத்தை விடவும், வில்வ அர்ச்சனையே பூஜைக்கு ஏற்றது. இந்த விரதத்தின் பெருமையை வேறு எந்த விரதத்தோடும் ஒப்பிட முடியாது. கோவிலுக்கு சென்று நான்கு சாமபூசைகளில் பங்கேற்க முடியாதவர்கள் இரவு வீட்டிலேயே நான்கு சாமங்களிலும் நான்கு கால பூசையை முறைப்படி செய்யலாம். வீட்டில் பூசை செய்பவர்கள், பஞ்சாட்சர மந்திரமான நமசிவாய, சிவாய நம வார்த்தைகளை உச்சரித்தபடி இருக்க வேண்டும்.

## சிவனின் மகத்துவம்

நான்கு கால பூசைக்கு முன்பாக நடராஜரையும், பிரதோச நாயகரான நந்தியம்பெருமானையும் வழிபட வேண்டும். முதல் சாமத்தில் சோமாஸ்கந்தரையும், இரண்டாம் சாமத்தில் தென்முகக் கடவுளான தட்சிணாமூர்த்தியையும், மூன்றாம் சாமத்தில் லிங்கோத்பவரையும், நான்காம் சாமத்தில் ரிஷபாரூட மூர்த்தி (சந்திரசேகரர்)யையும் வழிபட வேண்டும்.

கண் விழித்திருக்கும் பக்தர்கள் சிவ புராணம், திருவிளையாடல் கதைகள், அறுபத்து மூவர் வரலாறு முதலான சிவ மகத்துவங்களை விவரிக்கும் ஞான நூல்களைப் படிப்பது புண்ணியம் தரும். மறுநாள் அதிகாலையில் குளித்து விட்டு இறைவனுக்கு நைவேத்தியம் படைத்து வணங்க வேண்டும். ஏழை எளியவர்களுக்கு தானம் செய்து விட்டு சாப்பிட வேண்டும்.

# முருகப்பெருமானின் ஒவ்வொரு பெயருக்கும் ஒரு காரணங்கள் இருக்கிறது



சிவபெருமானின் நெற்றிக் கண்ணில் இருந்து தீப்பொறியாக வெளிப்பட்டு, சரவணப் பொய்கையில் தோன்றியவர் முருகப்பெருமான். அவருக்கு இதைத் தவிர கந்தன், குமரன், வேலவன், ஆறுமுகன், குகன் என்று பல்வேறு பெயர்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பெயருக்கும் ஒரு காரணங்கள் இருக்கிறது. ஒரு சில பெயர்களுக்கான காரணத்தை இங்கே தெரிந்து கொள்ளலாம்.

## முருகன்

'முருகு' என்றால் 'அழகு' என்று பொருள். இந்த சொல்லுக்கு இளமை, மணம், கடவுள் தன்மை, தேன் என்று பல அர்த்தங்கள் உள்ளன. ஆதலால் முருகப் பெருமான், மாறாத இளமையும், அழியாத அழகும், குறையாத நறுமணமும், நிறைந்த தெய்வத் தன்மையும், தெவிட்டாத தேன் இனிமையும் கொண்டவர் என்று பொருள் கொள்ளலாம். மெல்லின, இடையின, வல்லின மெய் எழுத்துகளுடன் ஒவ்வொன்றுடனும் 'உ' என்னும் உயிரெழுத்து இணைந்து 'முருகு' என்றாயிற்று. இந்த மூன்றும் இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி ஆகியவற்றை குறிப்பதாக சொல்வார்கள்.

## ஆறுமுகன்

சிவபெருமானுக்கு தத்புருஷம், அகோரம், வாமதேவம்,

சக்தியோஜாதம், ஈசானம் என ஐந்து முகங்கள். இவற்றுடன் சக்தியின் அதோமுகமும் இணைந்து ஆறுமுகமாக தோன்றியதால் முருகப் பெருமானுக்கு 'ஆறுமுகன்' என்று பெயர் வந்தது. இதன் மூலம், முருகப் பெருமான் சிவரூபமாகவும், சக்தி ரூபமாகவும் திகழ்கிறார் என்பதை உணர்ந்துகொள்ளலாம். திரு, புகழ், ஞானம், வைராக்கியம், வீரியம், ஐஸ்வரியம் என்பவைதான் ஆறுமுகங்கள் என்று சொல்பவர்களும் உண்டு.



## குகன்

மனம் என்னும் குகையில் வசிப்பவர் என்பதால் 'குகன்' என்று பெயர் பெற்றார். இவர் அந்த குகையையே தகராகாசமாக எண்ணி வீற்றிருப்பவர். 'தகராகாசம்' என்றால் 'பொற்சபை' என்று பொருள். அடியார்களின் மனக் கோவிலில் தங்கியிருப்பவர் என்பதாலும் 'குகன்' என்று அழைக்கப்படுவதாக சொல்வார்கள்.

கந்தன்

'கந்து' என்றால் நடுவில் இருப்பது என்று பொருள். சிவபெருமானுக்கு, உமாதேவிக்கும் இடையில் இருப்பதால் 'கந்தன்' என்னும் பெயர் ஏற்பட்டது. 'ஸ்கந்தர்' என்றால் தோள் என்ற அர்த்தமும் உண்டு. இதற்கு வலமையுடையவன் என்றும் பொருள் கூறுகிறார்கள்.



## சரவணபவன்

'சரவண பவ' என்னும் ஆறு அட்சரத்தையும் கொண்டவர் என்பதால் 'சரவணபவன்' என்ற பெயர் வந்தது. 'சரவணபவன்' என்றால் 'நாணல் சூழ்ந்த பொய்கையில் தோன்றி யவன்' என்று பொருள். 'ச' என்றால் மங்களம், 'ர' என்றால் ஒளிகொடை, 'வ' என்றால் சாத்வீகம், 'ண' என்றால் வீரம் என்று இத்தகைய சிறப்புகளுடன் தோன்றியவர் முருகப்பெருமான்.



சகரம் என்றால் உண்மை. ரகரம் என்றால் விஷ நீக்கம், அகரம் என்றால் நித்ய திருப்தி, ணகரம் என்றால் நிர்விடமயம், பகரம் என்றால் பாவ நீக்கம், வகரம் என்றால் இயற்கை குணம் என்றும் கூறுவார்கள்.

### வேலவன்

சூரபதுமனை அழிப்பதற்காக புறப்பட்ட முருகப்பெருமானுக்கு, அன்னை பராசக்தி சக்திமிகுந்த வேல் ஒன்றை வழங்கினார். அந்த வேலைக் கொண்டுதான் சூரபதுமனுடன் முருகன் போரிட்டார். போரின் முடிவில் மாமர வடிவம் கொண்டு நின்ற சூரனை நோக்கி வேலை வீசினார். அது மாமரத்தை இரண்டாகப் பிளந்தது. அதன் ஒரு பகுதி மயிலாகவும், மற்றொரு பகுதி சேவல் கொடியாகவும் மாறியது. வேலை கையில் ஏந்தியதால் 'வேலவன்' என்று அழைக்கப்பட்டார்.

### விசாகன்

'விசாகன்' என்பதற்கு 'பட்சியின் மேல் சஞ்சரிப்பவர்' என்று பொருள். வி- பட்சி, சாகன் - சஞ்சரிப்பவர். பட்சி என்றால் பறவை என்று அர்த்தம். மயில் பறவையை வாகனமாகக் கொண்டவர் முருகப்பெருமான். அதே போல் சேவலைக் கொடியாகக் கொண்டவர். இது பறவைகளிடம் இறைவனுக்கு உள்ள ஒப்பற்ற கருணையைக் காட்டுகிறது. மயில் வாகனத்தில் வலம் வருபவர் என்பதால், 'விசாகன்' என்று அழைக்கப்படுகிறார்.


ஆலயங்களுக்கான அறிவித்தல்!



'அகரதீபம்' இதழை பெற்றுக் கொள்வதற்கும், ஆலயங்களுக்கான விளம்பரங்களைப் பிரசுரிக்கவும் எம்மோடு தொடர்பு கொள்ளவும்

தொடர்புகளுக்கு

00 49 176 47 11 87 11

சிலருக்கு தனது வீட்டிலே பல பிரச்சனைகள் நடைபெறும். இதற்கு காரணம் வீட்டின் வாஸ்து சரியில்லாமையே ஆகும்.

வீடு கட்டும்போது வாஸ்து பார்க்காமல் கட்டியது. இடுகாட்டிற்கு அருகில் இருப்பது, மேலும் அவர்களின் வீட்டு சந்தோசமில்லாமை, எந்த காரியம் தொடங்கினாலும் அது சரியாக அமையாமை, எதற்கெடுத்தாலும் தடங்கள் போன்ற நிகழ்வுகள் நடைபெறுமாயின் அவற்றை அதவாது வாஸ்து தோசம் நீங்க பைரவருக்கு விளக்கு போட வேண்டும்.

வீட்டின் நான்கு மூலைகளிலும் விளக்கு ஏற்றி பைரவர் கவசம், பைரவர் காயத்ரி, பைரவர் ஸ்லோகம், ஸ்துதி மற்றும் பைரவர் போற்றி போன்றவற்றை சொல்ல வேண்டும். இதனை 90 நாட்களுக்கு செய்யலாம் இல்லையெனில் தோசம் விலகும் வரை செய்யலாம்.

இதனை செய்வதற்கு முன் பைரவர் கோவிலுக்கு சென்று விநாயகருக்கு விளக்கு ஏற்றி விட்டு பின்னர் பைரவருக்கும் விளக்கு ஏற்றி அவரிடம் அனுமதி வாங்குவது போல் பின்னர் வீட்டிற்கு வந்து விளக்கினை ஏற்றி வழிபடலாம். இதனால் பிரச்சனைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். இவ்வழிபாட்டினை தேய்பிறை அட்டமி, பௌர்ணமி நாட்களில் ஆரம்பிக்கலாம்.

# பைரவர் வழிபாடு செய்வதால் உண்டாகும் பலன்கள்





# இறைவனுக்கு படைக்கும் நய்வேத்தியம் நமக்கு பிரசாதமாவது ஏன்?

இறைவனுக்கு படைக்கும் நைவேத்தியம் நமக்கு பிரசாதமாக ஏன் வழங்கப்படுகிறது? இதற்கான விடையை நாம் தெரிந்து கொள்வதற்கு ஒரு கதையின் சுருக்கத்தை இப்பொழுது காணலாம் வாருங்கள்.

கண்ணன், குசேலர் இவர்கள் இருவரை பற்றிய கதைதான் இது. கண்ணனும் குசேலரும் சாந்திவனி ஆசிரமத்தில் ஒன்றாக கல்வி பயின்றவர்கள். இருவரும் சிறு வயதிலிருந்தே நண்பர்கள். இருவரின் குருகுல வாசம் முடிந்ததும் பிரிந்துவிட்டனர். அதன் பிறகு கண்ணன் துவாரகையின் அரசர் ஆனார். ஆனால் குசேலன் வறுமையில் கஷ்டத்துடன் தன் வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தார்.

குசேலர் வறுமையில் இருந்து நீங்க என்ன செய்வது என்று தெரியாமல் யோசித்துக் கொண்டிருக்கும் போது, குசேலரின் மனைவி தன் கணவருக்கு ஒரு யோசனை கூறினாள். என்னவென்றால்,



“உங்களின் நண்பர் கண்ணன் இப்பொழுது துவாரகையின் அரசனாக தானே இருக்கின்றார். அவரிடம் உதவி கேட்டால் நம் வறுமை நீங்க ஒரு வழியை கூறுவார் அல்லவா?” என்றவாறு குசேலனரின் மனைவி கூறினாள்.

ஆனால், குசேலருக்கோ வறுமை நிலையில் நண்பனை காண்பதற்கே தயக்கமாக இருந்ததோடு உதவி கேட்கவும் மனம் இல்லை. ஆனால் தன் மனைவியின் கட்டாயத்தினாலும், வறுமையை போக்க வேறு வழி இல்லாத காரணத்தினாலும் குசேலர் கண்ணனைக் காண துவாரகைக்கு புறப்பட்டார். குசேலர் தன் நண்பனை நீண்ட நாட்கள் கழித்து சந்திக்க போவதால், கண்ணனுக்கு ஏதாவது வாங்கிக் கொண்டு செல்ல வேண்டும் என்று நினைக்கின்றார்.

குசேலருக்கோ வறுமை, என்ன செய்வது? பின்பு தன்னால் முடிந்த



அவலை (அவல்) ஆசையோடு கண்ணனுக்கு வாங்கி சென்றார். குசேலருக்கு வறுமை என்பதால் கிழிந்த துணி உடன் நடைபயணமாக தனது பயணத்தை மேற்கொண்டார். துவாரகைக்கு வந்தடைந்தார். ஆனால் கண்ணனின் அரண்மனைக்கு வெளியில் இருக்கும் காவலர்கள் அவரை உள்ளே விட வில்லை. காரணம் குசேலர் கண்ணனை தன் நண்பன் என்று கூறுகின்றார். இவ்வளவு ஏழ்மையாக உள்ள ஒருவர் எப்படி அரசனான கண்ணனுக்கு நண்பனாக இருக்க முடியும் என்ற சந்தேகம் தான் காவலர்களுக்கு எழுந்தது.

மிகுந்த போராட்டத்திற்குப் பின்பு குசேலர் உள்ளே செல்ல அனுமதி வழங்கப்பட்டது. குசேலர் வந்திருக்கும் செய்தியும் காவலர்கள் மூலம் கண்ணனுக்கு எட்டியது. கண்ணன் ஓடி வந்து தனது நண்பனை கட்டித்தழுவி உள்ளே அழைத்துச் சென்று, அமர வைத்து, தன் மனைவி ருக்மணியுடன் சேர்ந்து கண்ணனும், குசேலருக்கு பாதபூசை செய்து, பின்பு விருந்து அளித்து, உபசரித்தனர். என்ன அற்புதம் அல்லவா இது. விருந்து முடிந்ததும் கண்ணனும், குசேலரும் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார்கள். உடன் ருக்மணியும் உள்ளார்.

ருக்மணி கண்ணனைப் பார்த்து, “இவ்வளவு தூரம் உங்களைக் காண வந்துள்ள உங்கள் நண்பர் குசேலர், தங்களுக்காக எதுவுமே எடுத்து வரவில்லையா என்று கேட்டார்.” ஆனால் குசேலர் அவலை கண்ணன் இடம் கொடுக்க வில்லை. ஏனென்றால் செல்வ செழிப்புடன் இருக்கும் கண்ணனுக்கு வெறும் அவலை எப்படி கொடுப்பது என்ற தயக்கம்தான். திரும்பத்திரும்ப கண்ணன் கேட்டதன்



காரணமாக தயக்கத்துடன் அவலை, கண்ணனிடம் கொடுத்தார்.

குசேலரிடமிருந்து அதை வாங்கிய கண்ணன் அதிலிருந்து ஒரு கைப்பிடி எடுத்து வாயில் போட்டதும், குசேலரின் வீடு செல்வ செழிப்பில் நிரம்பியது. இரண்டாவது முறையாக வாயில் போட்டதும் வறுமைக்கான விடிவுகாலம் பிறந்தது. மூன்றாவது முறையாக வாயில் போடும்போது ருக்மணி தடுத்துவிட்டார்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் வாமன வடிவில் வந்து ஒரு அடியில் விண்ணுலகையும் மறு அடியில் மண்ணுலகையும் மற்றும் மூன்றாவது அடியில் மகாபலியை முழுமையாக ஆட்கொண்டார். இதனால் தான் மூன்றாவது முறை கண்ணன் வாயில் அவலை போட்டுக் கொண்டால் எங்கே குசேலரை கண்ணன் ஆட்கொண்டு விடுவாரோ என்ற பயத்தில் தான் ருக்மணி மூன்றாவது முறை அவலை வாயில் போடும் போது அதனை தடுத்து விட்டாள்.

கண்ணன் ருக்மணியை பார்த்து, "எதற்காக நான் சாப்பிடுவதை தடுக்கின்றாய்" என்று கேட்கின்றார். அதற்கு ருக்மணி இவ்வாறாக பதில் கூறினாள். என்னவென்றால், "தங்களுக்குக் கொடுக்கப்படும் எந்த ஒரு பொருளானாலும் அது மகா பிரசாதம் தான்.

உங்கள் நண்பன் ஆசையோடு கொண்டு வந்த அந்த பிரசாதத்தை எனக்கு கொஞ்சம் கொடுக்கக் கூடாதா என்று கண்ணனிடம் கேட்கின்றாள்". கண்ணன் மீதமுள்ள அவலை ருக்மணிக்கு பிரசாதமாக கொடுத்தார். குசேலர் கண்ணனுக்காக கொண்டுவரப்பட்ட அவலை ருக்மணி பிரசாதமாக உட்கொண்டாள். இந்த கதையின் மூலமாகத்தான் கடவுளுக்கு நாம் அளிக்கும் நெய்வேத்தியம், திரும்பவும் நமக்கு பிரசாதமாக அளிக்கப்படுகிறது என்பதை உணர்த்துகிறது.

# திருமகளால் நேர்ந்த திருப்பம்



லட்சுமியும், அவளது அக்கா ஜேஷ்டா தேவியும் (மூதேவி) பூலோகத்தில் உலா வந்தனர். அப்போது வேலைக்காரன் ஒருவனை அவனது எஜமானன், "மூதேவி! அசமந்தம் மாதிரி என்னடா பண்ணிட்டிருக்கே!" எனத் திட்டினார்.

இதைக் கேட்ட ஜேஷ்டா வருத்தமுடன், "பார்த்தாயா லட்சுமி! திட்டுபவன் கூட என் பெயரைத் தான் சொல்கிறான். இந்த வேலைக்காரனை இப்போதே பணக்காரனாக ஆக்குகிறேன் பார்" என ஆவேசப்பட்டாள். அவன் செல்லும் வழியில் பொற்காசு மூடை ஒன்றைக் கிடக்கச் செய்தாள். அவனும் எடுத்து செல்ல அவனது மனைவி சந்தோஷத்தில் குதித்தாள். அண்டை வீட்டுப் பெண்ணிடம் உழக்கு வாங்கி காசை அளக்க ஆரம்பித்தாள்.

உழக்கு கொடுத்தவளோ சதிகாரி. எதற்கு உழக்கு என அறிய அதனடியில் புளியை ஒட்டிக் கொடுத்தாள். அவளது எண்ணம் போலவே, உழக்கை கொடுக்கும் போது, புளியில் ஒரு பொற்காசு ஒட்டியிருந்தது. பேராசை கொண்ட அவள் இரவோடு இரவாக பொற்காசுகளை திருடினாள். பணத்தை இழந்ததால் மீண்டும் வேலைக்குச் சென்றான். அவனுக்கு ஒரு வைர மோதிரம் கிடைக்கச் செய்தாள் ஜேஷ்டா. அதை அணிந்த அவன் குளத்தில் குளிக்கச் சென்ற இடத்தில் கையை உதறவே தண்ணீருக்குள் மோதிரம் விழுந்தது.

சளைக்காத ஜேஷ்டா, முத்து மாலை ஒன்றை கிடைக்கச் செய்தாள். மோதிரம் போல இதுவும் போய் விடுமோ என்ற பயத்தில் குளக்கரையில் கழற்றி வைத்து விட்டு குளித்தான். ஆனால் அவன் திரும்பி வந்த போது மாலையைக் காணவில்லை. தன் கெட்ட நேரத்தை எண்ணி அவன் வருந்தினான். ஜேஷ்டாவும் தங்கை மகாலட்சுமியிடம் நடந்ததை விவரித்தாள்.

தொடர்ச்சி 21ஆம் பக்கம் பார்க்க...

# திருக்கேதீஸ்வரம்

புராதன இலங்கையின் சிறப்பு வாய்ந்த ஐந்து ஈஸ்வரங்கள் என அன்புடன் அழைக்கப்படும் ஐந்து சிவன் திருக்கோயில்களுள் திருக்கேதீஸ்வரம் ஒன்றாகும்.

இத் திருக்கோயில் புராண, மற்றும் இதிகாச காலத்து வரலாற்று முக்கியத்துவத்தைக் கொண்டது. இந்து சமயத்தின் உலக மகா இதிகாசமான இராமாயணம் மற்றும் முருகப் பெருமானின் பெருமைகளையும், வரலாற்றுச் சிறப்புகளையும் கூறும் 'ஸ்கந்த புராணம்' - தமிழில் 'கந்த புராணம்' -என்ற புராண நூலிலும் இலங்கைத் தீவின் அழகும், அத்தீவில் நிலவிய சிவ வழிபாடும், மக்களின் வாழ்க்கை முறைகளும் சிறந்த முறையில் எடுத்தியம்பப்படுகின்றன.

இராமாயணக் கதை இலங்கைத் தீவு பற்றிக் குறிப்பிடும் உண்மைகளைப் பார்ப்போம்: திருக்கேதீஸ்வரத் திருக்கோயில் இராமாயண காவியத்திலேயே சிறந்த முறையில் குறிப்பிடப்படுகின்றது.

இராவணனின் மனைவியர் பலர். அவர்களுள், பேரழகு மிக்கவளும் , பட்டத்து ராணியாக விளங்கியவளுமான மண்டோதரி சிறந்த கற்புக்கரசி. இவள் மயன் என்ற சிற்றரசனின் மகள். மயன் ஆட்சி செய்த இடத்தின் பெயர் மாதோட்டம் என்ற மாந்தை. (மாதோட்டம் பண்டைய இலங்கையின் சிறப்பு வாய்ந்த துறைமுகம் என்பதையும், அதன் சிறப்புகளையும் பின்னர் சொல்வேன்.)

மண்டோதரி சிறந்த சிவபக்தை என்பதும், அவள்



மாதோட்டத்தில் இருந்த திருக்கேதீஸ்வரத் திருக்கோயிலில் சிவபெருமானை வழிபாடு செய்ததையும் பண்டைய இதிகாசங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன.

திருக்கேதீஸ்வரத் திருக்கோயிலில் பிருகு என்ற மகாமுனிவர் சிவபெருமானை வழிபட்டதை ‘மகா முனிவர்கள் வரலாறு’ நமக்கு எடுத்துரைக்கின்றது.

நவக்கிரகங்களில் ஒருவரான கேது பகவான் இத் திருக்கோயிலில் சிவபெருமானை வழிபட்டுத் தமது சாபம் நீங்கப்பெற்றார் என்று ‘தக்ஷிண கைலாச மான்மியம்’ என்ற பண்டைய வரலாற்று நூல் கூறுகின்றது. கேது பகவான் பக்தியுடன் பூசித்ததாலேயே இத் திருக்கோயிலுக்குத் ‘திருக்கேதீஸ்வரம்’ என்னும் பெயர் உண்டாயிற்று.

இந்து மதத்தின் மிகப் பெரிய புராண நூலான ‘ஸ்கந்த புராண’த்தில் (இது முருகப்பெருமானின் வரலாற்றுச் சிறப்புகளைக் கூறும் நூல் என்பது உங்களுக்குத் தெரியும். மேலும், முருகப்பெருமான் குற வள்ளியைத் திருமணம் செய்த திருத்தலம்



இலங்கையிலுள்ள கதிர்காமம்தான் என்பதும் ஒரு கர்ண பரம்பரைக் கூற்று.)

மூன்று அத்தியாயங்களில் இலங்கையைப் பற்றியும், அத்தீவின் அழகைப் பற்றியும் அங்கே வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறைகளையும் பற்றி விளக்கிவிட்டு, இலங்கையின் முக்கியமான இரண்டு புராதனமான சிவன் திருக்கோயில்களான திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகியவற்றின் தோற்றத்தைப் பற்றி நமக்கு எடுத்துரைக்கின்றது.

அப் புராணத்தின்படி, முன்னொரு காலத்தில், வாயுதேவனுக்கும், ஆதிசேடனுக்கும் யுத்தம் மூண்டபோது, ஆதிசேடனைத் தாக்குவதற்காக வாயுதேவன் மகா மேரு மலையின் சிகரங்களில் மூன்றை எடுத்து வீசினார். அந்தச் சிகரங்களில் இரண்டு இலங்கைத் தீவில் வீழ்ந்தன. ஒன்று திருக்கேதீஸ்வரமாகியது.

மற்றொன்று, திருக்கோணேஸ்வரமாகியது. மகா மேரு மலை இறைவன் உறையும் புனிதமான மலையாகையால், சிவபெருமான் இத் திருத்தலங்களையும் தமது உறைவிடங்களாக்கிக் கொண்டார். ஆகையால், மகா மேரு மலையின் புனிதத்துவமும், பெருமையும் திருக்கேதீஸ்வரத் தலத்துக்கும் உள்ளது.

இந்த வரலாற்றுச் சிறப்புகள் 'தக்ஷிண கைலாச மான்மியம்' என்ற பண்டைய தமிழ் வரலாற்று நூலிலும் விளக்கப்பட்டுள்ளது.

புராண காலத்தைக் கடந்து வரும்போது, அடுத்ததாக, சைவ சமயத்தின் சமய குரவர்களான திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் ஏழாம் நூற்றாண்டிலும், சுந்தர மூர்த்தி நாயனார் எட்டாம் நூற்றாண்டிலும் இந்தத் திருக்கோயிலுக்கு வருகை தந்து இத் திருக்கோயிலில் உறையும் திருக்கேதீஸ்வரரின் சிறப்பைப் பற்றியும், அதன் அருகே அமைந்துள்ள புனிதமான பாலாவித் தீர்த்தத்தின் மகிமைகளைப் பற்றியும் தமது தேவாரங்களில் பாடியுள்ளார்கள்.

இந்தியாவிலும், இலங்கையிலும் அமைந்துள்ள 275 தேவாரப் பாடல் பெற்ற சிறப்புத் தலங்களுள் இத் திருக்கோயிலும் ஒன்றாகும். ஈழத்திலுள்ள சிவன் திருக்கோயில்களுள், திருக்கேதீஸ்வரமும், திருக்கோணேஸ்வரமும் மட்டுமே இவ்வாறு பாடல்பெற்ற தலங்களாக விளங்குவது இவற்றின் தனிச் சிறப்பாகும்.

திருக்கேதீஸ்வரம் திருக்கோயில் இலங்கையில் மன்னார் மாவட்டத்தில், மன்னார் நகருக்கு ஏழு மைல் தொலைவில், மாதோட்டம் என்ற புராதனமான துறைமுக நகரத்தில் அமைந்துள்ளது. பண்டைக் காலத்தில் இத்திருக்கோயிலும், மாந்தை என்று அழைக்கப்படும் மாதோட்டத் துறைமுகமும் உலகப் புகழ் பெற்று விளங்கின.



மாதோட்டத் துறைமுகம் முக்கியமான வியாபாரத் துறைமுகமாக விளங்கியது. கிரேக்கர்களும், ரோமானியர்களும், அராபியர்களும், எத்தியோப்பியர்களும், பெர்சியர்களும், சீனர்களும், ஜப்பானியர்களும் மற்றும் பர்மியர்களும் கடல் கடந்து இத் துறைமுகத்துக்குக் கப்பல்களில் வந்திறங்கினார்கள். இலங்கையிலிருந்து வியாபாரப் பொருட்களை வாங்கிச் சென்றார்கள்.

பிற்பட்ட காலகட்டத்தில், இலங்கையைப் போர்த்துக்கேயர்கள் கைப்பற்றியபோது, அவர்கள் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்காகவும், இந்துத் திருக்கோயில்களில் நிறைந்திருந்த செல்வங்களைக் கொள்ளையடிப் பதற்காகவும் இந்துக் கோயில்கள அனைத்தையும் இடித்துத் தரை மட்டமாக்கினார்கள்.

அவ்வாறே, திருக்கேதீஸ்வரத் திருக்கோயிலும் **1,505**ஆம் ஆண்டளவில் போர்த்துக்கேயர்களால் இடித்துத் தரைமட்டமாக்கப் பட்டது. அந்தத் திருக்கோயிலின் அழகும், வலிமையும் வாய்ந்த கருங்கற்கள் மன்னார் கோட்டையையும், ஊர்காவற்றுறை ***(Kayts)*** கடற்கோட்டையையும் மற்றும் ஒரு கிறிஸ்தவ தேவாலயத்தையும் கட்டுவதற்கு உபயோகிக்கப்பட்டன. அப்போது திருக்கோயிலிலிருந்த செல்வங்கள் யாவும் கொள்ளையடிக்கப் பட்டன. ஏராளமானோர் கொல்லப்பட்டனர்.

மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின்னர், புராதனமான இத் திருக்கோயிலின் இடிபாடுகளில் மீதமிருந்த பொருட்கள் **1894** ஆம் ஆண்டு நிகழ்ந்த புதைபொருள் ஆராய்வின்போது கிடைக்கப்பெற்றன.

அந்த ஆராய்ச்சியின்போது, திருக்கேதீஸ்வரப் பெருமானின் சிவலிங்கமும் மேலும் பல வழிபாட்டுத் திருவுருவங்களும் கூட இறைவனருளால் கிடைக்கப் பெற்றன. அன்றிலிருந்து, இத் திருக்கோயிலை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என்ற ஆவல் ஈழத்துச் சைவப் பெருமக்கள் மனங்களில் உதயமானது. ஆயினும், ஏறக்குறைய நானூறு ஆண்டுகளுக்குப்பின்னரே அம்முயற்சி கைகூடியது.

ஆம், சைவ சமயம் தழைத் தோங்கப் பல வழிகளிலும் பாடுபட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் அருமுயற்சியாலும், ஈழத்துச் சைவப் பெருமக்களின் ஒன்றுசேர்ந்த உழைப்பாலும் **1910** ஆம் ஆண்டில் இத் திருக்கோயில் புதிய பொலிவுடன் சிவாகம விதிகளுக்கு இணங்க மீண்டும் கட்டப்பட்டது. பாலாவிப் புனித தீர்த்தக் குளமும் புதுப்பிக்கப்பட்டது.

**1952** ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) செய்யப்பட்டது. மேலும் சில அகழ்வாராய்ச்சிகளின்பின்னர், இத் திருக்கோயிலில் மீண்டும் **1976** ஆம் ஆண்டு யூலை மாதம் நான்காம் திகதி கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

பண்டைய அழகுத் திருக்கோயில் தற்போது இல்லையென்றாலும், சிவாகம விதிகளுக்கு இணங்கவும், திராவிடச் சிற்பக்கலை முறைகளுக்கிணங்கவும் தற்போதுள்ள திருக்கோயில் அழகும் சிறப்பும் ஒருங்கே அமையும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

ஈழத் திருநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் இத் திருக்கோயிலில் இறைவனை வழிபடுவதற்காக மக்கள் கூடி வருகின்றார்கள். மகா சிவராத்திரி விழா இத் திருக்கோயிலில் வெகு விமரிசையாக வருடந்தோறும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

# அறிவோம் ஆன்மீகம்

## பாகம்-18

ஆன்மீகம் என்ற தமிழ் சொல்லுக்கு நிகரான பொருள் கொண்ட சொல் வேறு எந்த மொழியிலும் காணமுடியாது. இச் சொல்லைப் போன்றே 'அறம்' என்கிற சொல்லும் இருக்கிறது. ஆனால் இன்று அவரவர் தமது எண்ணப்படியே இச் சொற்களுக்குப் புதுப் புது அர்த்தங்களைக் கற்பித்து, தமிழ் மொழி, தமிழ் இனம் ஆகியவற்றின் சிறப்பையும், தொன்மத்தையும் அழிப்பதில் உலக இன மக்களும், அரசுகளும் இணைந்து நடத்திய முள்ளிவாய்க்கால் இறுதிக் கட்டப் போரின் மூலம் வெளியாகியது.

அவர்களின் வன்மத்தின் கொடூரம், அவர்களால் நடத்தப்பட்ட தமிழ் மக்கள் இன அழிப்புக்கு நீதி விசாரணை கூட இடம் பெற விடாமல் சர்வதேச அளவில் தடைகளை ஏற்படுத்துவதில் சர்வதேச அரசுகள் காட்டிவரும் தீவிரத்தின் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது. அவர்களின் செயற்பாடுகளை எல்லாம் அறம் அல்லது ஆன்மீகம் என்று சொல்லிக் கொள்ளும் அவலம், கடந்த பதினொரு வருடங்களாக நிலவுகிறது. இதனை அறம் என்பதா? ஆன்மீகம் என்பதா?

இன்று திரு. ரஜனி காந்த் என்கிற மராட்டிய சினிமா நடிகர், தமிழ் நாட்டில் அரசியல் செய்ய "தமிழ் நாட்டில் ஆன்மீக அரசியல் செய்ய வருகிறேன்" என்கிறார். வருடந் தோறும் தமது நடிப்புத் தொழிலில் ஒய்வு தேடி இமய மலைக்கு உல்லாசப் பயணம் போய் வரும் மராட்டியரான சினிமா நடிகர் ரஜனிகாந்த், தமிழ் மக்களின் ஆன்மீக வழிகாட்டி போல, ஆன்மீக அரசியல் செய்ய வருகிறேன் என்பது, பச்சையான அயோக்கித்தனம் என்று சொல்வதை விட, வேறு எப்படிச் சரியாக ஒருவரால் சொல்லிவிட முடியும்?.

அவர் ஒரு சினிமா நடிகராக, வசன கர்த்தா எழுதிய வசனங்களை, டைரக்டர் சொன்னபடி பேசி, நடிப்பதை எப்படி அறிவு சார்ந்த திறமை எனக் கருதி, அவர் கூறும் ஆன்மீக அரசியல் ஒன்று இருக்கிறது என்றும், அப்படியான ஒரு ஆட்சியைத் தமிழ் நாட்டு மக்களுக்குத் தருவார் எனவும் நம்பி வாக்களிக்க முடியும்?

உண்மையில் அங்கே ஒரு பொய்யான ஆன்மீக அரசியலும், அதனை எதிர்த்து மக்கள் நடத்தி வரும் உண்மை ஆன்மீக அரசியல் புரட்சியும் கடந்த சில வருடங்களாக நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

உதாரணமாக மிருக வதைக்கு எதிரான சட்டம் என்று அரசு ஜல்லிக் கட்டைத் தடை செய்ய முயன்ற பொழுது, அதையும் ஆன்மீக அரசியலாகப் பேசியவர்களைப் பார்த்த பொழுது, பலர் அதையும் நம்பத்தான் செய்தார்கள். ஆனால், தினமும் இலட்சக் கணக்கான ஆடுகள், மாடுகள், கோழிகள் உணவுக்காக ஏற்றுமதி செய்யப்பட்டு, கொல்லப்படும் நிலையில் ஜல்லிக் கட்டு எனப்படும் தமிழரின் கலாச்சார வீர விளையாட்டை மட்டும் தடை செய்வதை எப்படி ஆன்மீக அரசியல் என ஆக முடியும்?

இராமலிங்க வள்ளலார் "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்று பாடியதை மட்டும்தான் ஆன்மீகம் எனலாம். ஆனால் அடுத்தவர் துன்ப, துயரங்களைக் கண்டு கொள்ளாமலும், சினிமா அரசியல் பேசிவரும் ரஜினிகாந்த் நினைத்த பொழுது இமயமலைக்குப் போய்வருவதால், ஆன்மீக அரசியல் என்று ஒரு புதிய கண்டு பிடிப்பாக மக்களை ஏமாற்ற முற்படுவதை ஆன்மீகம் என்பதா? அரசியல் என்பதா? இது போலத்தான் கூட்டணி தர்மம் என்றொரு புதிய அரசியல் பேசப்படுவதைப் பார்க்கும் பொழுது, அதையும் ஆன்மீக அரசியலாக பேசப்படும் நாள் அதிக தூரத்தில் இல்லை என்றே தெரிகிறது.

> **ஆன்மீக அரசியல் செய்ய வருகிறேன் என்பது, பச்சையான அயோக்கித்தனம் என்று சொல்வதை விட, வேறு எப்படிச் சரியாக ஒருவரால் சொல்லிவிட முடியும்?**



கடவுள் கோயில், சாதி சமயச் சண்டைகள் எல்லாமே அரசியல் வாதிகளின் கைகளில் சிக்கி, அவதிப்படுவதைக் காணும் பொழுது, உலகில் அரசியல் எது? ஆன்மீகம் எது? என்பதைப் பிரித்துப் பார்க்க முடியாத படிக்கு கலப்படம் செய்த பாலில் பால் எது? தண்ணீர் எது? எனப் பிரித்தறிய முடியாமல் இருப்பதுபோல, எல்லா விடயங்களிலும் ஆன்மீகத்தைக் கலப்பதன் மூலம், எல்லாரும் தம்மைப் புனிதர்களாக, ஆன்மீக வாதிகளாக் காட்டிக் கொள்ள முற்படுகிறார்கள்.

இதற்கு முக்கிய எடுத்துக் காட்டாக தஞ்சைப் பெருவுடையார் கோயில் திருக்குட முழுக்கு விவகாரத்தை பார்க்கலாம் . இதைப்பற்றி பேசாத அரசியல்வாதிகளோ, ஆன்மீகவாதிகளோ கிடையாது எனும் அளவுக்கு அரசியலும், ஆன்மீகமும் கட்டிப் புரண்டு அடித்துக் கொள்வதைக் காண்கிறோம். அன்பானவர்களே! உண்மை ஆன்மீகம் எதுவென சமய நூல்களைத் தேடிப் படித்து தெரிந்து கொள்ளுங்கள். பஞ்சமாபாதகங்களை பயமின்றிச் செய்பவனும் கூட, தத்துவங்களைப் பேசித் தப்பித்து விடுவான். அதைக் கேட்டு ஏமாந்துவிடாதீர்கள்.

(தேடல் தொடரும்)

# வெற்றிக்கு தேவை அடக்கம்

ஒரு சமயம் தேவர்கள், அசுரர்களுக்கு இடையே போர் நடந்தது. பிரம்மாவின் அருளால் தேவர்கள் வெற்றி பெற்றாலும், தங்களின் திறமையே வெற்றிக்கு காரணம் என ஆணவம் கொண்டனர். இதையறிந்த பிரம்மா திருவிளையாடல் ஒன்றை நிகழ்த்தினார்.

நான்கு முகங்களை கொண்ட பிரம்மா, ஒரே ஒரு முகத்துடன் தேவர்களின் முன் நின்றார். புதியவரைக் கண்ட இந்திரன், 'வந்திருப்பது யார்?' என அறிந்து வரும்படி அக்னிதேவனை அனுப்பினான்.

அருகில் வந்ததும், "நீ யார்?" என பிரம்மா முந்திக் கொண்டார். "நான் தான் அக்னிதேவன். எல்லா தெய்வங்களுக்கும் என் மூலம் தான் யாகத்தீயில் பொருட்களை அர்ப்பணம் செய்வார்கள். எந்த பொருளையும் அழிக்க என்னால் முடியும்" என்றான் கர்வமாக.



"அப்படியா? இதோ இங்கு கிடக்கிறதே துரும்பு. இதை உன் சக்தியால் எரியச் செய்வாயா?" என்றார் பிரம்மா.

"ப்பூ... இவ்வளவு தானா," என அலட்சியத்துடன் அக்னி ஊதினான். ஆனால் அது எரியவில்லை. எவ்வளவோ முயற்சித்தும் முடியவில்லை. தோல்வியை ஒப்புக் கொண்ட அவன் இந்திரனிடம் நடந்ததை தெரிவித்தான்.

அடுத்ததாக வாயுதேவனை அனுப்பினான் இந்திரன். அவனும் தற்பெருமையுடன், "நான் தான் வாயு. நான் இல்லாவிட்டால் உலகில் உயிர்கள் வாழ முடியாது. எதையும் ஆட்டிப் படைக்கும் சக்தி எனக்கு உண்டு" என்றான்.

"இதோ இந்த துரும்பை உன் சக்தியால் நகர்த்து பார்க்கலாம்" என்றார் பிரம்மா.

"நொடியில் நகர்த்துகிறேன்" என வாயு பெரு மூச்சு விட்டான். அது சற்றும் அசையாததால் பலமாக ஊதினான். புயல் வீசத் தொடங்கியது. ஆனாலும் துரும்பு நகரவில்லை. இறுதியாக இந்திரனே



அங்கு வந்தான்.

அப்போது பிரம்மா மறைந்தார். அந்த இடத்தில் ஆதிபராசக்தி ஒரு பெண் வடிவில் நின்றாள்.

"பெண்ணே யார் நீ? இங்கு இருந்தவரைக் காணவில்லையே..?" எனக் கேட்டான் இந்திரன்.

"அற்பனே! தேவர்கள் ஒவ்வொருவரிடமும் இருக்கும் சக்திக்கு எல்லாம் ஆதாரமான ஆதிபராசக்தி நானே! போரில் வெற்றிக் களிப்பில் நீ இருக்கிறாயா?. வெற்றியோ, தோல்வியோ எந்நிலையிலும் ஒருவன் அடக்கத்தை இழப்பது கூடாது" என அறிவுறுத்தி சுயரூபம் காட்டினாள்.

"தாயே பராசக்தி! மன்னியுங்கள் அம்மா" என பணிந்தான் இந்திரன். அக்னி, வாயு உள்ளிட்ட மற்ற தேவர்களும் பராசக்தியைச் சரணடைந்தனர். பிரம்மாவிடம் மன்னிப்பும் கேட்டனர்.

# திருமகளால் நேர்ந்த திருப்பம்

13ஆம் பக்க தொடர்ச்சி....

இரக்கப்பட்ட லட்சுமி வேலைக்காரனைக் காக்க முடிவெடுத்தாள். மறுநாள் காலையில் அவன், குளத்தில் மீன்கள் பிடித்து மனைவியிடம் சமைக்கச் சொல்லிக் கொடுத்தான். விறகு இல்லாததால் பனை ஓலைகளை வெட்டி வரச் சொன்னாள் மனைவி. மரமேறிய போது அதில் பறவையின் கூட்டில் முத்து மாலை தொங்குவதைக் கண்டான். குறிப்பிட்ட பறவையே மாலையை எடுத்ததை புரிந்து கொண்டான். இதற்கிடையில் அவனது மனைவி வீட்டில் மீனை அறுத்த போது வயிற்றில் மோதிரம் இருக்கக் கண்டாள்.

வேலைக்காரனும், அவனது மனைவியும் ஒரே சமயத்தில் 'பாத்துட்டேன்; பாத்துட்டேன்' என ஒருவருக்கொருவர் தாங்கள் பார்த்ததை தெரிவித்த போது பொற்காசுகளை திருடிய அண்டை வீட்டுப் பெண்ணின் காதில் விழுந்தது.

'பொற்காசுகளை திருடிய விசயம் தெரிந்து விட்டது போல..' என அவள் எண்ணிக் கொண்டாள். பஞ்சாயத்தாரிடம் சென்றால் அவமானம் நேருமே என பயந்தாள். அன்றிரவே பொற்காசுகளை வேலைக்காரன் வீட்டு வாசலின் முன் வைத்து விட்டுச் சென்றாள். திருமகள் அருள் இருந்தால், வாழ்வில் ஏற்படும் திருப்பத்தை சொல்ல முடியாது.



# எலுமிச்சைப் பற்றிய ஆன்மீகத் தகவல்கள்

இந்து கோவில்களின் முன்பகுதியில், அல்லது காவல் தெய்வங்களின் அருகில் சூலாயுதங்கள் பார்த்திருப்போம், அந்த சூலாயுதத்தின் மேல்பகுதியில் எலுமிச்சை குத்தப்பட்டிருக்கும் அல்லவா, அது ஏன் தெரியுமா? ஆன்மீகவாதிகள் எலுமிச்சம் பழத்தை 'தேவகனி' என்று அழைப்பார்கள்,

நம் மண்ணின் முக்கனிகளான மா, பலா, வாழைகளுக்கு இல்லாத சிறப்பு எலுமிச்சைக்கு ஏன் என்று தோன்றுகிறதல்லவா, அது ஏனென்றால் மாம்பழத்தில் வண்டு குற்றம் உண்டு, பலாவில் வியர்வை குற்றம் உண்டு, வாழையில் புள்ளி குற்றம் உண்டு, ஆனால் எலுமிச்சை மட்டும் எந்த குற்றத்திற்கும் உடன்படவில்லை என்று முன்னோர்கள் எலுமிச்சையை தேவகனி என்று பெயரிட்டுள்ளார்கள்,

இது மற்ற கனிகளை காட்டிலும் மனித எண்ணங்களை ஈர்க்கும் சக்தி அதிகம் கொண்டது என்பதால் சூலாயுதத்தில் எலுமிச்சை குத்தப்பட்டிருக்கும், எலுமிச்சை அம்மனுக்கு உரித்தானதாகும். இயல்பாகவே தெய்வீக சக்திகளையும், மந்திரங்களை தேக்கி வைத்துக் கொள்ளும் தன்மையையும் பெற்றது.



தெய்வ வழிபாட்டில் கனிமாலை சாத்தும் வழக்கம் உள்ளது. கனிமாலை என்றால் அது எலுமிச்சம் பழ மாலையையே குறிக்கும். துர்கை, பத்ரகாளி, மாரியம்மன், நடராஜர், பைரவர் போன்ற தெய்வங்களைப் பூஜிக்கும் போது எலுமிச்சை மாலை சாத்துவார்கள்.



இம்மாலையை தயாரிப்பவர்கள் ஒரே அளவிலான நல்ல நிறமுள்ள பழங்களை மாலையாக கோர்க்க வேண்டும். எலுமிச்சம்பழங்களின் எண்ணிக்கை 108, 54, 45, 18 என்ற எண்ணிக்கையில் இருக்க வேண்டும். பழங்கள் காயாகவோ அல்லது மிகவும் பழுத்த நிலையிலோ இருந்தால் அவற்றை தவிர்ப்பது நல்லது.

துர்கை, பத்ரகாளி போன்ற உக்ரமான தெய்வங்களுக்கு கனிமாலை சாத்தும் போது, அத்தெய்வங்களை குளிர்விக்க தயிர்சாதம், பானகம் நிவேதனம் செய்ய வேண்டும், கூழ் வார்த்தும் பக்தர்களுக்கு கொடுக்கலாம். நீண்ட நாள் தடைபட்ட செயல்கள் கனிமாலை சாத்தி வழிபாடு செய்தால் கைகூடும் என்பது நம்பிக்கை. பல திருத்தலங்களில் இந்த பழங்களைத்தான் பிரசாதமாகத் தருகிறார்கள்,



உதாரணத்திற்கு சிவகங்கை மாவட்டம் மடப்புரம் காளி கோயிலில் அம்பாளுக்கு அணிவிக்கப்படும் எலுமிச்சை அனைத்தும் பிரசாதமாகத் தரப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டம் வல்லம் ஏகவுரி அம்மன் கோயிலில் குழந்தை பாக்கியம் இல்லாத பெண்களுக்கு எலுமிச்சை சாறை பிரசாதமாக கொடுக்கிறார்கள். இதைப் பருகினால் கர்ப்பமாவார்கள் என்பது ஐதீகம்.

பேய் பிசாசு மீது நம்பிக்கை இல்லாதவர்கள் கூட, நேர்மறை ஆற்றல், எதிர்மறை ஆற்றல் குறித்த நம்பிக்கையை உண்மையில்லை என்று சொல்ல மாட்டார்கள். ஏனென்றால் விஞ்ஞான ரீதியாக இத்தகைய ஆற்றல்கள் நிரூபிக்கப்பட்டுள்ளது,

ஒருவரது வீட்டில் எதிர்மறை ஆற்றல்கள் அதிகம் இருந்தால், அந்த வீட்டில் உள்ளவர்களுக்கு அடிக்கடி உடல்நல குறைபாடு ஏற்படும், உறவுகளின் இடையில் பல பிரச்சனைகளை சந்திக்க நேரிடும். அந்த வீட்டில் செல்வம் நிலைக்காது, எனவே எதிர்மறை ஆற்றலை கண்டறிந்து அதை வெளியேற்ற வேண்டும்.





# நெற்றியில் சந்தனம், குங்குமம் இடுவது ஏன்?

சந்தன மரம் மருத்துவப்பயன் நிறைந்த ஒரு மரம். சந்தனக்கட்டையை சந்தனக் கல்லில் தேய்த்து சாந்தாக்கி, உடம்பில் பூசிக்கொள்வதன் மூலம் கோடை வெப்பத்திலிருந்து தங்களை காத்துக்கொள்கிறார்கள் இந்தியர்கள். சந்தனத்தின் வளர்ந்த மரம், வாசனை நிறைந்தது. மரத்தின் வைரம் பாய்ந்த கட்டைப் பகுதி எண்ணெய்ச்சத்து நிறைந்தது. இதிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் மருத்துவத்தன்மை நிறைந்ததும், சருமத்துக்கு குளிர்ச்சி தரக்கூடியதுமாகும்.

நம் உடலின் அனைத்து நாடி நரம்புகளும் மூளையுடன் இணைக்கப் பட்டுள்ளன. உடலின் பெரும்பாலான நரம்புகள் நெற்றிப்பொட்டின் வழியாகவே செல்கின்றன. ஆகவே நெற்றிப்பகுதி அதிக உஷ்ணமாகவே இருக்கும். நம் அடிவயிற்றில் நெருப்பு சக்தி இருக்கிறது. ஆனால் அந்தச் சூட்டின் தாக்கம் அதிகமாக உணரப்படுவது நெற்றிப் பொட்டில் தான். அங்கு பூசப்படும் சந்தனம் நமது மூளையையும், அதை இணைக்கும் நரம்புகளையும் குளிரச் செய்கிறது. நெற்றிப்பகுதியிலுள்ள ***frontal cortex*** என்னும் இடத்தில் அணியப்படும் சந்தனமானது, வெப்பம் மிகுதியால் ஏற்படும் மூளைச்சோர்வை நீக்குகிறது.

பெண்கள் நெற்றியில் பொட்டு வைத்துக்கொள்ள பயன்படுத்தும் ஒரு



பொடி குங்குமம். இயற்கை முறையில் விரலி மஞ்சள், வெண்காரம், படிகாரம், கஸ்தூரி மஞ்சள் ஆகியவற்றைச் சேர்த்து அரைக்கப்பட்ட பொடியுடன் நல்லெண்ணெய் சேர்த்தால் குங்குமம் தயார். மஞ்சளும், காரமும் வேதிவினை புரிவதால் சிவப்பு நிறம் கிடைக்கிறது. அம்மன் கோவில்களில் பிரசாதமாக குங்குமம் தரப்படுகிறது. மனித உடலில் தெய்வ சக்தி வாய்ந்தது நெற்றிக்கண். அதாவது, இரண்டு புருவங்களுக்கு நடுவிலுள்ள பகுதி. இங்கு குங்குமத்தை இட்டால் அமைதி கிடைக்கும்.

நம் கபாலத்தில் உள்ள சிந்தனை நரம்புகளின் முடிச்சு இரு புருவங்களுக்கு இடையே உள்ளது. மனிதன் அதிகமாக சிந்திக்கும்போது சிந்தனை நரம்புகள் சூடேறி நெற்றி வலி, தலைபாரம், தலைச்சுற்றல் ஏற்படும். மேலும் மன உளைச்சல் ஏற்பட்டு, தன் நிலை மறக்க வேண்டிய சூழ்நிலை உருவாகி பல விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படும். ஆகவே அந்த நரம்பு மண்டலம் குளிர்ச்சியாக இருக்க வேண்டும்.

சந்தனம், குங்குமம் போன்றவற்றுக்கு குளிர்ச்சியூட்டும் தன்மை உண்டு. எனவே அந்த நரம்பு மண்டலம் குளிர்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காக சந்தனம் பூசி, சந்தனம் காயாமல் இருக்க குங்குமம் இடுகிறோம். இதனால் புத்துணர்வும், புதுத்தெளிவும், புதிய சிந்தனைகளும், உற்சாகமும் தோன்றும். உணர்ச்சியற்ற நரம்புகள் தூண்டப்படுகின்றன. மனிதனின் உடற்கூறுக்கு உகந்த முறைகளைத்தான் நாம் இறை வழிபாடுகள் மூலம் அடைகிறோம்.




சிவராத்திரி அன்று நாம் அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டிய முக்கியமான கதையை பற்றியே தொகுப்பே இந்த பதிவு. இந்த பதிவில் வரும் கதையினை முழுவதுமாக படித்து சிவனை பிராத்தனை செய்யுங்கள் உங்களுக்கு சிவன் அருள் நிச்சயம் கிடைக்கும். "ஓம் சிவாய நம", கதையை துவங்குகிறேன் தொடர்ந்து வாசித்து சிவனருள் பெறுங்கள்.

அந்த காலத்தில் ராமர் வனவாசம் சென்ற இடம் தண்ட காரண்யம் காட்டிற்கு அருகில் உள்ள கிருஷ்ணா நதிக்கரையில் அமைந்துள்ள கமலாபுரம் என்ற அழகிய ஊர். அந்த ஊரில் ஓர் அழகிய எழில் கொஞ்சும் பொய்கை உள்ளது.

அந்த பொய்கைக்கு கலசரஸ் என்று அழகான பெயரும் உண்டு. அந்த குளத்தின் அருகில் நிறைய முனிவர்கள் சிவனை நோக்கி தவமிருந்து வந்தனர். - ***Advertisement*** - அப்படி வழிபட்டவர்களில் ஒருவர் தான் நாம் இன்று தெரிந்து கொள்ளவேண்டிய முனிவர் வித்வஜிஹ்மர். இந்த முனிவர் பல வருடங்களாக திருமணம் செய்யாமல் கூட இறைவனை நோக்கி தவம் இருந்து வந்தார்.

அந்த சமயத்தில் அவரை சந்திக்க கௌஸ்திமதி ரிஷினு ஒருவர் அவரை காண நேரில் சென்றார். தன்னை சந்திக்க ஒருவர் வந்திருப்பதை அறிந்த வித்வஜிஹ்மர் அவரை சிறப்பான முறையில் வரவேற்று அவரை உபசரித்தார்.

பிறகு, வித்வஜிஹ்மர்யிடம் பேச துவங்கிய கௌஸ்திமதி இந்த இளம் வயதில் எதற்காக திருமணம் முடிக்காமல் கூட இப்படி தவம் செய்து கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் இப்படி செய்வது தவறு.! திருமணம் செய்யாமல் இப்படி இறைவனை நோக்கி தவம் இருந்தால் நீங்கள் இறந்ததுக்கு பின்னால் உங்களுக்கு சொர்க்கத்தில் கூட இடம் கிடைக்காது அதோடுமட்டுமின்றி முன்னோர்களின் சாபமும் உங்களுக்கு வந்தடையும்.

இதுகூட உங்களுக்கு தெரியாதா? என்று கேட்டார். மேலும், இறைவனை நோக்கி கடும் தவம் இருந்த அகத்திய முனிவர் கூட இறந்த பின் சொர்க்கத்திற்கு செல்லவேண்டும் என்று கருதி லோபாமுத்திரை என்ற பெண்ணை தானே உருவாக்கி மணந்துகொண்டார். ஆகையால், நீங்களும் என் மகளான வசுமதியை மணம்புரிந்து இல்லற வாழ்வில் ஈடுபட வேண்டும் என்று வித்வஜிஹ்மரிடம் கேட்டுக்கொண்டார் கௌஸ்திமதி.

அவை அனைத்தையும் பொறுமையாக கேட்ட வித்வஜிஹ்மர் சிறிது நேரம் கழித்து கௌஸ்திமதியிடம் பேசத்துவங்கினார். குடும்பம், குழந்தைன்னு எனக்கு எந்த துன்பமும் வேண்டாம். தனிமையும் தவமுமே எனக்கு போதும் வாழ்வில் வேறு எந்த துன்பமும்,துயரமும் வரக்கூடாது என்றே நான் தவ வாழ்வில் ஈடுபட்டுள்ளேன்.

இந்த தவவாழ்க்கைக்காக என் தந்தையிடம் இருந்து கூட நான் பிரிந்து வந்து வாழ்ந்து கொண்டிருக்கிறேன் அப்படி இருக்கையில் எனது கர்மா என்னை தொடர்ந்து வருகிறது என்று கூறினார். உடனே கௌஸ்திமதி கூறினார் பாஞ்சாலி, சீதை, அருந்ததி, அனுசுயா அவங்களுக்கு இணையானவள், என் மகள் வசுமதி ஆகையால் என் மகளை நீங்கள் திருமணம் செய்ய நான் என செய்யவேண்டும் என்று கூறுங்கள் நான் செய்கிறேன் என்றார்.

அதற்கு பதிலளித்த வித்வஜிஹ்மர் 'மார்க்கண்டேயர், துர்வாசர், சனத்குமாரர்கள், கண்வ மகரிஷி, நாரதர், சுகர் ஆகியோர் திரு மணம் செய்யாமல் வாழ வில்லையா? அவங்க ஏன் கல்யாணம்

செய்யாம வாழ்ந்தாங்க? அதுக்கான சிரியான காரணத்தை நீங்கள் எனக்குச் சொன் னால் நான் உங்கள் மகள் வசுமதியைக் கல்யாணம் செஞ்சுக்கறேன்'னு சொன்னார் வித்வஜிஹ்மர்.


பிறகு அங்கிருந்து சென்ற கௌஸ்திமதி இதற்கு பதில் அறிய நாராயணனை நோக்கி தவம் இருந்து அவரை வைகுண்டத்திற்கு சென்று சந்தித்தார். அப்போது வித்வஜிஹ்மர் கேட்ட கேள்விக்கு பதிலை நாராயணனிடம் கேட்டு அதற்கு சரியான பதில் வேண்டும் என்று முறையிட்டார்.

பிறகு அந்த கேள்விக்கு பதிலளிக்க துவங்கினார் நாராயணன். அவர் ஒவ்வொருத்தருக்கான பதிலையும் கூற துவங்கினார். மார்க்கண்டேயர் : மார்க்கண்டேயர் பூமாதேவி **என்ற ஒரு** பெண் குழந்தையை வளர்த்து **என்னிடம்** கொடுத்துள்ளார். துர்வாசர் : **துர்வாசரும்** குந்திக்கு குழந்தை பாக்கியத்து**க்கான ஐந்து** மந்திரங்களை தந்துள்ளார்.


சனத்குமாரர் : **அவர்களுக்கும்** இரண்டு வளர்ப்பு பெண் **குழந்தைகள்** இருந்தனர் நாரதர் : நாரத**ர் அவரது** வாழ்வில் சிறிதுகாலம் தமய**ந்தி என்ற** பெண்ணுடன் வாழ்ந்து வந்தா**ர். அதனால்** அவருக்கும் இல்லறம் இருந்தது **என்றார்.**

இதனை அப்படியே வித்வஜிஹ்மரிடம் சென்று கூறு **அவர் உன்** மகள் வசுமதியை மணந்துகொள்ள சம்மதம் தெரிவிப்பார் என்று ஆசி வழங்கி கௌஸ்திமதியை பூலோகத்துக்கு அனுப்பினார். பூலோகம் திரும்பிய கௌஸ்திமதி நேராக வித்வஜிஹ்மரிடம் சென்று நாராயணன் கூறிய அந்த பதில்களை அப்படியே கூறினார்.

விடை சரி என்பதால் வித்வஜிஹ்மர் வசுமதியை திருமணம் செய்ய சம்மதித்து மணந்து கொண்டார். பிறகு, வித்வஜிஹ்மரும் வசுமதியும் சிறப்பாக இல்லற வாழ்வில் வாழ்ந்தனர். வசுமதி சிவராத்திரி அன்று சிவனை நேரில் காண விரதம் இருந்து சிவராத்திரி இரவு வேளையில் சிவனின் அருள் பெற்று சிவபெருமானை நேரில் சென்று பார்த்துள்ளார்.



## சிவராத்திரி அன்று இந்த கதையை படித்தால் அனைத்து வளங்களும் கிடைக்கும் தெரியுமா?



# தசரதர் 6,0000 பெண்களை திருமணம் செய்தது ஏன்?

நமது நாட்டின் முன்னோர்களான ரிஷிகளும், முனிவர்களும் நமது நாட்டின் மக்கள் அவர்களின் வாழ்வில் மேம்பட சிறந்த புராணங்களையும், இதிகாசங்களையும் இயற்றினர். அதில் வாழ்விற்கு மேன்மையளிக்கும் கருத்துக்கள் பல இருந்தாலும், அந்த இதிகாச புராணங்களில் இருக்கும் சில கதைகளின் உண்மையான பின்னணி தெரியாமல் பெரும்பாலான மக்கள் இருக்கின்றனர்.

அப்படியான ஒரு கதை தான் "தசரத மகாராஜா "60,000 பெண்களை" மணந்து கொண்டதாக கூறப்படும் சம்பவம். தசரதர் ஏன் இத்தனை திருமணங்கள் புரிந்தார் என்பதற்கான காரணத்தை இங்கு தெரிந்து கொள்வோம்.

வேத காலத்தில் காட்டில் ஆசிரமத்தில் தங்கியிருந்த ஜமதக்னி முனிவர் சிறந்த தவ ஆற்றல் கொண்டவராக இருந்தார். அந்த ஆற்றலின் மூலமாக சொர்க்க லோக பசுவான "காமதேனுவை" தனது ஆசிரமத்தில் வளர்த்து வந்தார்.

அதை கண்ட மன்னன் கார்த்தவீர்யாஜுனன் அந்த காமதேனுவை தனக்கு தருமாறும், அதற்கு இணையான செல்வத்தை தான் தருவதாகவும் ஜமதக்னி முனிவரிடம் கூறினான். அதற்கு ஜமதக்னி முனிவர் மறுப்பு தெரிவிக்க, அதை அவரிடமிருந்து பறித்து சென்றான் கார்த்த வீர்யாஜுனன்.

இதைக் கேள்விப்பட்ட ஜமதக்னியின் தவ புதல்வரும், "மஹாவிஷ்ணுவின்" அவதாரமுமான "பரசுராமர்" கார்த்த வீர்யார்ஜுனனுடன் போரிட்டு, அவனை கொன்று அந்த காமதேனு பசுவை மீட்டுவந்து தனது தந்தை ஜமதக்னியிடம் ஒப்படைத்தார்.

கார்த்தவீர்யாஜுனன் கொல்லப் பட்டதற்கு பழிக்கு பழியாக, அவனது மூன்று புதல்வர்கள் பரசுராமரின்

தந்தையான ஜமதக்னி முனிவரை, “21 முறை” வாளால் வெட்டிக்கொன்றனர். இதனால் கோபத்தின் உச்சத்திற்குச் சென்ற பரசுராமர், அந்த மூன்று மகன்களையும் மற்றும் அவனது படைகளையும் சிவ பெருமான் தனக்கு அளித்த கோடரி மூலம் வெட்டி வீழ்த்தினார்.

மேலும் தனது தந்தை ஜமதக்னி முனிவரை கொடூரமாக கொன்ற “சத்திரியர்களான” “அரசர்கள்” மீது பரசுராமருக்கு மிகுந்த வெறுப்பு ஏற்பட்டது. எனவே இந்த நாட்டின் எந்த ஒரு சத்ரிய பரம்பரையின் “21 தலைமுறையினரையும்” தான் வெட்டி வீழ்த்தப்போவதாக சபதம் ஏற்று அப்படியே செய்து வந்தார்.

அப்போது “அயோத்திய நகரை” ஆண்டு வந்த சத்ரிய குலத்தில் உதித்த “தசரத சக்ரவத்தி” தனது நாட்டை தர்மத்தின் படி ஆட்சி புரிந்து வந்தார். பல போர்களில் வெற்றி பெற்றிருந்த வீரராக தசரதர் இருந்தாலும், பரசுராமரின் “போர்திறன், தவசக்தி, மற்றும் சிவ பெருமானிடம் அவர் தவமிருந்து பெற்ற கோடரி” போன்றவை அவரிடம் இருக்கும் வரை, இந்த பூமியில் தான் உட்பட எந்த சத்ரியனும் அவரை வெல்ல முடியாது என்றறிந்தார்.

அதே நேரத்தில் புதிதாக திருமணம் புரிந்திருக்கும் எந்த ஒரு அரசனையும் போருக்கு அழைக்காமல் அவனை ஆசிர்வதித்து செல்லும் பரசுராமரின் குணம் பற்றி அறிந்தார் தசரதர். இது தான் பரசுராமரின் பலவீனம் என தெரிந்து கொண்டு, ஒவ்வொரு முறை பரசுராமர் தன்னை போருக்கு அழைக்க நேரில் வரும் போதும் புதிதாக ஒரு பெண்ணை திருமணம் புரிந்து பரசுராமரின் முன்பு தோன்றினார் தசரதர்.

அப்போது பரசுராமர் அவரை போருக்கு அழைக்காமல் அவரையும், அவரது புது மனைவியையும் ஆசிர்வதித்து விட்டுச் சென்றார். இப்படி ஒவ்வொரு முறையும் தனது உயிரை காப்பாற்றிக்கொள்ள, பரசுராமர் பார்வையில் படும்போதெல்லாம் ஒரு பெண்ணை புதிதாக திருமணம் செய்து கொண்டு அவர் முன் தோன்றினார்.



தனது நாட்டு மக்களுக்கு அரசனாக சேவை செய்யும் பொருட்டு, தான் உயிருடன் இருக்க வேண்டிய அவசியத்திலேயே தசரத சக்கரவாதி இத்தனை திருமணம் புரிந்தாரே அன்றி சுகங்கள் அனுபவிக்கும் எண்ணத்தினாலல்ல. எனவே நமது புராணங்களையும், இதிகாசங்களையும் ஆழ்ந்து படிக்காமல், மேலோட்டமாக சில விடயங்களை தெரிந்து கொண்டு அத்தகைய காப்பியங்களை கேலி செய்வது தவறு.

# அட்டமி நவமி நாட்களில் சுபகாரியத்தை செய்யாமல் தவிர்ப்பது ஏன்?



பொதுவாக இந்த இரு திதிகளிலும் நல்ல காரியங்கள் செய்வதை புறக்கணித்து விடுவார்கள். இதனால் கவலையுற்ற அஷ்டமி, நவமி ஆகிய இரு திதிகளும், மகாவிஷ்ணுவிடம் சென்று தங்களின் கவலையை கூறினார்கள்.

அப்போது விஷ்ணு பகவான், உங்களையும் மக்கள் அனைவரும் போற்றி துதிக்கும் நாள் வரும் என்று உறுதியளித்தார். அதன்படியே வாசுதேவர்-தேவகி ஆகியோருக்கு மகனாக அட்டமி திதியில் கிருஷ்ணர் தோன்றினார். அன்றைய தினம் கிருஷ்ண ஜெயந்தியாக கொண்டாடப் படுகிறது.

நவமி திதியில் தசரதர்-கௌசலை தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார் ராமபிரான். அன்றைய தினம் ராமநவமி திருநாளாக கொண்டாடப்படுகிறது. அமாவாசை நாளுக்கும், பௌர்ணமி நாளுக்கும் அடுத்து வரும் ஒன்பதாவது நாள் நவமி ஆகும்.

நவமி திதியில் தான் ஸ்ரீராமர் அவதரித்தார். அவர் அரியணை ஏற்கும் நேரத்தில் காட்டிற்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அதுமட்டும் இல்லாது சீதையை பிரிந்து அவர் பட்ட துயரங்கள் எல்லாம் நவமி திதியில் அவர் பிறந்தது தான் காரணம். எனவே, நவமி திதியில் நல்ல காரியங்கள் தொடங்கப்படுவதில்லை. ஆனால், தெய்வீக காரியங்களுக்கு ஏற்ற நாளாகும்.

பொதுவாக அட்டமி, நவமி நாட்களில் செய்யும் காரியம் இழுபறியாக முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. மேலும் அஷ்டமி, நவமி திதிகள் எதிர்மறையான எண்ணங்களைத் தோற்றுவிக்கும். சாதகத்தில் குரு பலவீனமாகவோ, தோசத்துடனே இருந்தால், நவமி அன்று சண்டி ஹோமம் செய்வது சிறப்பான பலனைத் தரும்.

நவமி திதி வரும் நாளில் எதிரிகள் மற்றும் போட்டியாளர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுத்தால் நமக்கு வெற்றி நிச்சயம். மேலும், இந்தத் திதியில் அன்னை சரஸ்வதி தேவியை வணங்கி வேலையில் ஈடுபட்டால், அனைத்துக் காரியமும் சுபமாக நடைபெறும்.

திருச்சிற்றம்பலம்

சைவநெறிக்கூடம்

# அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில்

மாலை 18.00 மணிமுதல்
20.00 மணிவரை
பூசை வழிபாடுகள்
இடம்பெறும்.

Der Verein SAIVANERIKOODAM
Arulganamigu Gnanalingesurar Tempel
Europaplatz.01, 3008 Bern, Switzerland
( 078 645 30 42 / 079 275 68 62 / 076 437 48 96 / 031 302 09 56
www.saivanerikoodam.ch facebook.com/saivanerikoodam
saivanerikoodam@hotmail.ch

அனைத்து நாட்களும்
காலை 09.00 மணி முதல்
இரவு 20.00 மணி வரை
திருக்கோவில் திறந்திருக்கும்.

## 2020ம் ஆண்டு நாட்காட்டி

### கும்பம் (மாசி)

| | |
|---|---|
| 01.02.20 சனிக்கிழமை | ஞானலிங்கேச்சுரம் திருக்குடமுழுக்கு 5ம் ஆண்டு நிறைவு திருச்சங்குமுழுக்கு மற்றும் சிறப்பு வழிபாடு மாலை 18.00 மணிமுதல். |
| 06.02.20 வியாழக்கிழமை | கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணிமுதல். |
| 08.02.20 சனிக்கிழமை | சுறவத்திங்கள் காற்குளம் (தைப்பூசம்) மற்றும் முழுமதி வழிபாடு மாலை 16.30மணி முதல் |
| 12.02.20 புதன்கிழமை | சண்டேச்சுரர் குருபூசை, சிறப்பு வழிபாடு 18.30 மணிமுதல் |
| 20.02.20 வியாழக்கிழமை | கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணிமுதல். |
| 21.02.20 வெள்ளிக்கிழமை | பெரும் சிவனிரவு நோன்பு (சிவராத்திரி), மாலை 17.00 மணிமுதல் |
| 23.02.20 ஞாயிற்றுக்கிழமை | மறைமதி (அமாவாசை) சிறப்பு வழிபாடு மாலை 16.30 மணிமுதல். |

### மீனம் (பங்குனி)

| | |
|---|---|
| 07.03.20 சனிக்கிழமை | காரிக்கழுவாய் (சனிப்பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணிமுதல். |
| 08.03.20 ஞாயிற்றுக்கிழமை | கும்பத்திங்கள் கொடுநுகவிழா (மாசிமகம்), முழுமதி சிறப்பு வழிபாடு, மாலை 17.00 மணிமுதல் |
| 10.03.20 செவ்வாய்க்கிழமை | திருவள்ளுவர் குருபூசை, மாலை 17.00 மணிமுதல் |
| 21.03.20 சனிக்கிழமை | காரிக்கழுவாய் (சனிப்பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணிமுதல். |
| 23.03.20 திங்கட்கிழமை | மறைமதி (அமாவாசை) சிறப்பு வழிபாடு மாலை 16.30 மணிமுதல். |

### மேழம் (சித்திரை)

| | |
|---|---|
| 05.04.20 ஞாயிற்றுக்கிழமை | கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணிமுதல். |
| 06.04.20 திங்கட்கிழமை | மீனத்திங்கள் (பங்குனி) உத்தரம் மற்றும் முழுமதி சிறப்பு வழிபாடு மாலை 16.30 மணிமுதல் |
| 07.04.20 செவ்வாய்க்கிழமை | முழுமதி சிறப்பு வழிபாடு, மாலை 16.30 மணிமுதல் |
| 13.04.20 திங்கட்கிழமை | மேழப்புத்தாண்டு (சித்திரைப் புதுவருடம்) (சார்வரி)" ஆண்டுப்பிறப்பு காலை 09.00 மணிமுதல் சிறப்பு வழிபாடுகள், திருக்கோவில் இரவு 20.30 மணிவரை திறந்திருக்கும். |
| 18.04.20 சனிக்கிழமை | திருநாவுக்கரசர் குருபூசை, சிறப்பு வழிபாடு, மாலை 18.30 மணிமுதல் |
| 20.04.20 திங்கட்கிழமை | கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணிமுதல். |
| 22.04.20 புதன்கிழமை | மறைமதி (அமாவாசை) சிறப்பு வழிபாடு மாலை 16.30 மணிமுதல். |







மன நிறைவான கொள்வனவுக்கு
என்று உங்களுடன்....

# TKS BESTFOODS

Rheinische Strasse 79
44137 Dortmund
Mobile : 0151 25 300 400
fax: 0231/95046882
tel: 0 231/ 95046883

TKS BEST FOODS

மலிவு...
தரம்...
தாராளம்...

சித்திரை புத்தாண்டை
முன்னிட்டு

## பிரமாண்ட மலிவு விற்பனை

ஏப்ரல் 1ம் திகதி முதல்
18ம் திகதி வரை

www.tks-bestfoods.de
info@tks-bestfoods.de